## பத்திரிக்கை செய்தி

## முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் பத்திரத்தில் திருத்தம் செய்வதற்கு லஞ்சம் பெற்ற பல்லடம் பஞ்சாயத்து யூனியன், சமூக நல விரிவாக்க அதிகாரி கைது

திருப்பூர் மாவட்டம், பருவையை சேர்ந்த திரு.செந்தில்குமார் என்பவர் பேன்சி ஸ்டோர் நடத்தி வருகிறார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உள்ளன. அக்குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/- வீதம் ரூ.50,000/-க்கு முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தில் பத்திரம் பெற்றுள்ளார். அந்த பத்திரத்தில் அவருடைய இரண்டாவது பெண் குழந்தையின் பிறந்த தேதியில் திருத்தம் செய்ய திருமதி.பசும்பொன்தேவி, சமூக நல விரிவாக்க அதிகாரி, பல்லடம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.3,000/- கொடுக்க வேண்டும் என்று கேட்டு, அதில் புகார்தாரரிடம் 16.11.2022ம் தேதி அன்று முதல் தவனையாக ரூ.1,500/-யை திருமதி.பசும்பொன்தேவி பெற்றுள்ளார். ஆனால் மீண்டும் திருமதி.பசும்பொன்தேவி, சமூக நல விரிவாக்க அதிகாரி அவர்கள் மீதியுள்ள லஞ்ச பணமான ரூ.1,500/-யை கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியுள்ளார். மீண்டும் கட்டாயப்படுத்தியதில் விரக்தி அடைந்து, லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருப்பூர் பிரிவில் புகார் மனு அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 25.11.2022 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது திருமதி.பசும்பொன்தேவி, சமூக நல விரிவாக்க அதிகாரி, லஞ்ச பணமான ரூ.1,500/-யை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

**PRESS NOTE**

**PALLADAM PANCHAYAT UNION, SOCIAL WELFARE EXTENSION OFFICER ARRESTED BY V&AC BY DEMAND AND ACCEPTANCE OF BRIBE**

The complainant Tr.Senthil Kumar is having a Fancy store at Tiruppur district. He is having two girl children. He received the bond for Rs.50,000/- (each girl Rs.25,000/-) under Chief Minister Girl Children Protection Scheme from the Government of Tamilnadu. There was a mistake in date of birth of the second child in the bond and in this connection he is applied for correction in bond at Social Welfare, Palladam Panchyat Union office. For effecting the correction Tmt.Pasumpondevi, Extension Officer, Social Welfare, Palladam, Panchayat Union Office, Tiruppur district demanded Rs.3,000/- as bribe. On 16.11.2022 the complainant paid Rs.1,500/- as advance amount of bribe to Tmt.Pasumpondevi, Extension Officer. Then again Tmt.Pasumpondevi, Extension Officer forced the complainant to give balance amount of Rs.1,500/- as bribe. The complaint not willing to pay bribe approached the V&AC Tiruppur detachment. In this connection a case was registered and a trap was organized today 25.11.2022. During trap proceedings, Tmt.Pasumpondevi, Extension Officer, reiterated the earlier demand and received the bribe amount of Rs.1,500/- from the complainant. The accused was arrested.